# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் - 01.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12863/SCIC/2024**

Ms.A. BEULA CHRISMAK DARIUS - மேல்முறையீட்டாளர்
D/O.G. Abraham Paul Jebaraj
No.101, Vijay Nagar, 1st Street
Varadharajapuram. Manimangalam Road
MUDICHUR, CHENNAI-600 048.
Phone:94446 11131.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
சட்டம் (ம) ஒழுங்கு
தாம்பரம் காவல் மாவட்டம்
தாம்பரம் காவல் ஆணையரகம்
சென்னை - 600 045.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **29.03.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.04.2024 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 21.05.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.10.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 29/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ O/o.the Assistant Commissioner of Police (Traffic). Tambaram City Police, T2 Chrompet Investigation Department, Chitlapakkam Police Station, Chengalpattu District அவர்களுக்கு அனுப்பி, அதில் "My Complaint Letter dated 08-03-2024 and General Information of Tamilnadu Traffic Rules and Regulation Act - regarding - Information regarding the action taken by the Assistant

Commissioner of Police (Traffic) to my above mentioned complaint letter." என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Ms.A.BEULA CHRISMAK DARIUS அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.M.சேகர்பாபு, காவல் உதவி ஆணையர், கூடுவாஞ்சேரி சரகம், தாம்பரம் காவல் ஆணையரகம் அவர்கள் ஆஜராகி, மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 29/03/2024 நாளிட்ட மனுவை, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தாம்பரம் காவல் மாவட்டம் அவர்கள் சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து, பள்ளிக்கரணை காவல் மாவட்டம் அவர்களுக்கு 27/05/2024 தேதியிட்டு அனுப்பியுள்ளதோடு, அதன் நகல் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். **இனி வருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தாம்பரம் காவல் மாவட்டம் அவர்கள், மனுதாரர்களின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனுக்களை, வேறு அலுவலகத்திற்கு மாற்றம் செய்யும் நேர்வில், அம்மனுக்களை சட்டப்படி உரிய காலவரையறையான 5 நாட்களுக்குள் மாற்றம் செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து, பள்ளிக்கரணை காவல் மாவட்டம் அவர்கள், மனுதாரருக்கு இனம் வாரியான பதில்களை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்புவதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை 30/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார். மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 29/03/2024 நாளிட்ட மனுவின் நகல் காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து, பள்ளிக்கரணை காவல் மாவட்டம் அவர்களுக்கு இவ்வாணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மனுதாரருக்கு, ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12863/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
சட்டம் (ம) ஒழுங்கு
தாம்பரம் காவல் மாவட்டம்
தாம்பரம் காவல் ஆணையரகம்
சென்னை - 600 045.

2.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து
பள்ளிக்கரணை காவல் மாவட்டம்
தாம்பரம் காவல் ஆணையரகம்
(Near Dr.Kamakshi Memorial Hospital)
சென்னை - 600 100.

## மேல்முறையீட்டாளர்

Ms.A. BEULA CHRISMAK DARIUS
D/O.G. Abraham Paul Jebaraj
No.101, Vijay Nagar, 1st Street
Varadharajapuram. Manimangalam Road
MUDICHUR, CHENNAI-600 048.
Phone:94446 11131.

RG/Sr.PC